Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத் தளம்

**செய்தியாளர்கள் தேவை**


தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை
☎ 94440 82959

PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
DHINATH DHALAM Tamil & English daily Paper
ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,
மலர் Volume : 01 | இதழ் Issue : 025 | சனிக்கிழமை Saturday | 25.04.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

## திமுக வேட்பாளர்களுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திடீர் சந்திப்பு



தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் விறுவிறுப்பாக நடந்து முடிந்திருக்கும் நிலையில், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் உள்ளிட்ட மாவட்டங்களின் திமுக வேட்பாளர்களுடன் முதல்வர் ஸ்டாலின் ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனையின்போது முதல்வர் அவர்களிடம், தேர்தல் களம் குறித்து கேட்டறிந்ததாகத் தெரிகிறது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் 234 தொகுதிகளிலும் நேற்று ஒரே கட்டமாக நடைபெற்றது. தமிழகத்தில் இளைஞர் கள், பெண் கள் ஆர்வத்துடன் திரண்டு வாக்களித்ததால், வாக்குப்பதிவு 85 சத வீ தத்தை தாண்டியு ள் ளது. தமிழகத்தில் நான்கு முனைப்போட்டி நி லவுவதால், தேர்தல் களம் சற்று பரபரப்பாக காணப்படுகிறது.

விறுவிறுப்பாக நடந்து முடிந்திருக்கும் நிலையில், தேர்தலில் போட்டியிட்ட சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் மேற்கு கழக வேட்பாளர்கள் மற்றும் அரியலூர் மாவட்டம் குன்னம் தொகுதி கழக வேட்பாளர் எஸ்.எஸ். சிவசங்கர் ஆகியோர் முதல்வர் ஸ்டாலினை நேரில் சந்தித்தனர்.

அண்ணா அறிவாலயத்தில் நடந்த இச்சந்திப்பில் தேர்தல் கள நிலவரம் தொடர்பாக முதல்வர் ஆலோசனை மேற்கொண்டதாகக் கூறப்படுகிறது. அப்போது, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, செய்தித்தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தார்.

முதல்வர் ஸ்டாலின் போட்டியிடும் கொளத்தூர் தொகுதியில் 85.63 சதவீதம், அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி போட்டியிடும் எடப்பாடி தொகுதியில் 91.94 சதவீதம், தவெக தலைவர் விஜய் போட்டியிடும் பெரம்பூர் தொகுதியில் 89.15 சதவீதம், நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் போட்டியிடும் காரைக்குடி தொகுதியில் 73.94 சதவீத வாக்குகள் பதிவாகியிருப்பது குறிப்பிடத்தகக்து.

## ஹார்முஸ் ஜலசந்தி நெருக்கடி: ஏப்.30ல் தூதரக தலைவர்கள் மாநாட்டில் பிரதமர் மோடி விளக்க உரை



புதுடெல்லி: ஹார்முஸ் ஜலசந்தியில் அமெரிக்காவும் ஈரானும் ஆதிக்கம் செலுத்தி வரும் நிலையில், வரும் 30-ம் தேதி டெல்லியில் நடைபெற உள்ள இந்திய தூதரகத் தலைவர்கள் மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி இது குறித்து விளக்க உரை நிகழ்த்த உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. கடந்த பிப்.28-ம் தேதி அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரான் மீது தாக்குதல் நடத்தின. இதையடுத்து, இஸ்ரேலுக்கு எதிராகவும், வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க நி லை க ளை குறிவைத்தும் ஈரான் தாக்குதல் நடத்தியது. மேலும், ஹார்முஸ் ஜலசந்தியை முடக்கியது.

இரு தரப்புக்கும் இடையே மோதல் முற்றிய நிலையில், பாகிஸ்தானின் தலையீடு காரணமாக கடந்த 8-ம் தேதி இருவாரங்களுக்கு போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து அமெரிக்காவும் ஈரானும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டன. எனினும், அது பலனளிக்காத நிலையில், போர் நிறுத்தத்தை காலவரையின்றி நீட்டிப்பதாக கடந்த 22-ம் தேதி அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அறிவித்தார்.

மேலும், ஈரான் துறைமுகங்களையும் ஹார்முஸ் ஜலசந்தியையும் அமெரிக்க கடற்படை முடக்கியுள்ள நிலையில், அமெரிக்காவுடன் அந்த நாடு உடன்பாடு மேற்கொள்ளும் வரை முடக்கம் தொடரும் என்று அறிவித்தார். ஈரான் மற்றும் அமெரிக்காவின் நடவடிக்கைகளால் ஹார்முஸ் ஜலசந்தி வழியாக கப்பல்கள் வெளியேறுவதோ உள்ளே செல்வதோ முடியாத நிலை உள்ளது. இந்திய துறைமுகங்களுக்கு வர வேண்டிய 14 கப்பல்கள் தற்போது ஹார்முஸ் ஜலசந்திக்கு உள்ளே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இதனால், இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பு பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஏப்ரல் 28 முதல் 30 வரை மூன்று நாட்களுக்கு இந்திய தூதரக தலைவர்கள் மாநாடு புதுடெல்லியில் நடைபெற உள்ளது. இதில், பல்வேறு நாடுகளில் இந்திய தூதர்களாக செயல்பட்டு வருபவர்கள் கலந்து கொள்ள இருக்கிறார்கள்.

இந்த மாநாட்டின் முதல் நாள், வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி தலைமையில் நடைபெற உள்ளது. இதில், மேற்கு ஆசியாவில் நிலவும் நெருக்கடி மற்றும் ஹார்முஸ் ஜலசந்தியை அமெரிக்காவும் ஈரானும் முற்றுகையிட்டு உள்ளதால் ஏற்படும் கடுமையான பொருளாதார பின்விளைவுகள் ஆகியவை குறித்து விக்ரம் மிஸ்ரி விளக்கம் அளிக்க உள்ளார். இதைத் தொடர்ந்து இந்த விவகாரத்தில் இந்தியா உட்பட உலக நாடுகள் ப ல வ ற் றி ன் நிலைப்பாடுகள் குறித்தும் அவர் விளக்கம் அளிக்க உள்ளார்.

இரண்டாம் நாள் மாநாட்டில், வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் உரையாற்ற உள்ளார். மேற்காசிய போர், உக்ரைன்போர், வளர்ந்து வரும் சீன ஆதிக்கம், புதிய உலகளாவிய சமநிலை ஆகியவை குறித்து இந்திய தூதர்களுக்கு ஜெய்சங்கர் விழிப்புணர்வை ஏற்படுத்த உள்ளார். இந்திய பாதுகாப்புப் படைகளின் தலைமைத் தளபதி ஜெனரல் அனில்சவுகான், மாநாட்டில் உரையாற்ற உள்ளார். அவர், இந்திய ராணுவத்தின் திறன் மற்றும் ராணுவ கட்டமைப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் சீர்திருத்தங்கள் குறித்து தூதரக தலைவர்களுக்கு விளக்கம் அளிக்க உள்ளார். இந்த மாநாட்டில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலும் உரைநிகழ்த்த உள்ளார்.

மாநாட்டின் மூன்றாம் நாளான ஏப். 30ம் தேதி பிரதமர் நரேந்திர மோடி உரை நிகழ்த்த உள்ளார். அப்போது, வெளியுறவுத் துறையில் இந்தியாவின் தொலைநோக்குத் திட்டம் குறித்தும், மேற்காசிய போர் மற்றும் ஹார்முஸ் ஜலசந்தி விவகாரம் குறித்தும் பிரதமர் மோடி உரையாற்றுவார் என தகவல் வெளியாகி உள்ளது. முக்கிய நாடுகளுக்கான தூதர் நியமனங்களுக்கு, தொழில்முறை ராஜதந்திரிகளைத் தாண்டி மற்றவர்களையும் கருத்தில் கொள்ள மத்திய அரசு முடிவு செய்துள்ள நிலையில், இந்த மாநாடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.


## சென்னையில் வாக்கு எண்ணும் மையங்களில் 4 அடுக்கு பாதுகாப்பு: காவல் ஆணையர் தகவல்

சென்னை: சென்னை பெருநகர காவல் ஆணையாளர், சென்னையில் உள்ள 3 வாக்கு எண்ணும் மையங்களுக்கும் நேரில் சென்று காவல் அதிகாரிகளுடன் பாதுகாப்புப் பணிகளை பார்வையிட்டார். வாக்கு எண்ணும் மையங்களில் 4 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில், தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல்-2026 தமிழகம் முழுவதும் நடைபெற்றது. சென்னை பெருநகர காவல் எல்லைக்குட்பட்ட 16 சட்டப்பேரவைத் தொகுதிகளில் நடைபெற்ற வாக்குப்பதிவு இயந்திரங்கள் ஆயுதங்கள் ஏந்திய காவல் குழுவினர் மூலம் பாதுகாப்பாக எடுத்து செல்லப்பட்டு ராணி மேரி கல்லூரி, லயோலா கல்லூரி மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் ஆகிய 3 வாக்கு எண்ணும் மையங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர காவல் ஆணையாளர் உத்தரவின்பேரில், கூடுதல் ஆணையாளர்கள் மேற்பார்வையில், இணை ஆணையாளர்கள் கண்காணிப்பில், துணை ஆ ணை ய ா ள ர் க ள் தலைமையில் மேற்படி 3 வாக்கு எண்ணும் மையங்களிலும் 4 அடுக்கு பலத்த காவல் துறை பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. முதல் அடுக்கில் மத்திய ஆயுத காவல் படையினரும் (CAPF), 2வது அடுக்கில் தமிழ்நாடு சிறப்பு காவல் படையினரும் (Tamilnadu Special Police), 3வது அடுக்கில் சென்னை பெருநகர ஆ யு த ப் ப டை யி ன ரு ம் (Armed Reserve), 4வது அடுக்கில் சென்னை பெருநகர காவல் சட்டம் மற்றும் ஒழுங்கு, குற்றப்பிரிவு, போக்குவரத்து, சிறப்புபிரிவுகளைச் சேர்ந்த காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களும் நியமிக்கப்பட்டு 24 மணி நேரமும் சுழற்சி முறையில் பலத்த பாதுகாப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



சென்னை பெருநகர காவல் ஆணையாளர் அபின் தினேஷ் மோதக் நேற்று இரவு ராணி மேரி கல்லூரி, அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் லயோலா கல்லூரி ஆகிய 3 வாக்கு எண்ணும் மையங்களுக்கு நேரில் சென்று காவல் அதிகாரிகளுடன் பாதுகாப்பு பணிகளை பார்வையிட்டார். பாதுகாப்பு பணிகள் மற்றும் கட்டமைப்புகளை ஆய்வு செய்து மேற்படி வாக்கு எண்ணும் மையங்களில் மேற்கொள்ள வேண்டிய வழிகாட்டுதல் நெறிமுறைகளை கடைபிடித்து, பாதுகாப்பு பணிகள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து காவல் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டு அறிவுரைகள் வழங்கினார்.

**வரி விளம்பரங்கள்**

தினத் தளம்
நடுநிலை நாளிதழ்
DHINATH DHALAM
மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள்
கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா
திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள்
ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன்
வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல்
தொடர்புக்கு : ☎ +919444082959

## தங்கம் விலை பவுனுக்கு ரூ.400 குறைவு:

சென்னை: 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை சென்னையில் பவுனுக்கு ரூ.400 என விலை குறைந்தது. அதே நேரத்தில் இன்று வெள்ளி விலையில் மாற்றம் ஏதுமில்லை.



சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, தங்கத்தின் மீதான முதலீடு, உ லக பங்குச் சந்தை முதலீடு உள்ளிட்டவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ண யிக்கப்படுகிறது. உலக அளவில் தங்கத்தை இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது. அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான போர் தங்கம் விலை மீது தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. இந்நிலையில், இரு நாடுகளுக்கும் இடையேயான போர் நிறுத்தம் நீட்டிக்கப்ப ட்டுள்ளது. இந்த அறிவிப்பை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பகிர்ந்துள்ளார். வர்த்தகம் தொடங்கியதும் 22 காரட் ஆபரணத் தங்கம் கிராமுக்கு ரூ.50 மற்றும் பவுனுக்கு ரூ.400 என விலை குறைந்தது. இதனால் ஒரு கிராம் தங்கம் ரூ.14,250-க்கும், ஒரு பவுன் ரூ.1,14,000-க்கும் விற்பனை ஆகிறது.

**செய்திகள்**
உடனுக்குடன் படிக்க
தினத் தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு மத்திய அமைச்சக ஸ்டார் அங்கீகாரத்தின் கீழ் 70 இலட்சம் நிதி



புது தில்லியில் இயங்கிவரும் இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் உயிரி தொழிநுட்பவியல் துறையானது பட்டப்படிப்பில்தொழில்நுடபத்தினை மேம்படுத்தும் பொருட்டு "ஸ்டார் கல்லூரி திட்டம்" (Star College Scheme) தொடங்கப்பட்டு செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் இந்தியாவில் செயல்பட்டு வரும் நன்கு ஆய்வகம் மற்றும் வகுப்பு வசதிகள் கொண்ட அறிவியல் கல்லூரியினைத் தேர்ந்தெடுத்து முதல் மூன்று ஆண்டுகளுக்கு ரூபாய் 70 இலட்சம் நிதி ஆதாரத்தினைக் கொடுத்து வருகிறது. இதன் அடிப்படையில் வருகின்ற கல்வியாண்டிற்காக நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி சிறந்த கல்லூரியாக தேர்ந்தெடுக்கப்பட்டு, அங்குசெயல்பட்டுவரும் உயிர் தொழில்நுடபவியல் மற்றும் கணினி அறிவியல் துறைகளின் கட்டமைப்பினை மேம்மடுத்த நிதி ஆதாரத்தினை வழங்கி பெருமை சேர்த்துள்ளது.

இத்தகைய திட்டமானது, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் ஆராய்ச்சியினை ஊக்குவித்தல், தொழிற்துறைகளை மேம்படுத்துதல் போன்றவற்றில் ஈடுபடும் ஆர்வத்தினை தூண்டுகிறது.

மேலும் பட்டப்படிப்பினை முடித்து பணிகளை மேற்கொள்ளும் போது எதிர்கொள்ளக் கூடிய சவால்களை முறியடிக்க மாணவர்கள் தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வாய்ப்புகளை வழங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்டார் கல்லூரி திட்டத்தின் மூலம் ரூபாய் 70 இலட்சம் நிதி உதவி பெருவதற்கு உறுதுணையாக செயல்புரிந்த முதல்வர் முனைவர் எஸ். மனோகரன், உயிர் தொழில்நுடபவியல் துறைத்தலைவர்முனைவர் கே. அப்துல் மற்றும் கணினி அறிவியல் துறைத்தலைவர்முனைவர் டி. பரிமளம் மற்றும் மாணவர்களுக்கு ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி. சண்முகன், அங்கத்தினர் பானுமதி சண்முகன், இணை நிர்வாக அறங்காவலர்களான எஸ்.நந்தகுமார் பிரதீப், எஸ். திருமூர்த்தி, மற்றும் நிர்வாக அலுவலர் முனைவர் வி.சி. ஸ்ரீனிவாசன் ஆகியோர் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள்.

# நாசா விண்வெளி ஆய்வு மையத்தின் கீழ் NSS நடத்திய போட்டி ஈரோடு ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளி மாணவர்கள் உலக அளவில் முதலிடம் பிடித்து சாதனை!



அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையத்தின் கீழ் NSS (National Space Society) நடத்திய சர்வதேச விண்வெளிப் போட்டியில், ஈரோடு ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளி மாணவர்கள் உலக அளவில் முதலிடம் பிடித்து வரலாற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

மாணவர்களின் அறிவியல் மற்றும் படைப்பாற்றல் திறனை ஊக்குவிக்கும் வகையில், 2026-ஆம் ஆண்டிற்காக "NSS விண்வெளி குடியிருப்பு" என்னும் தலைப்பில் உலகளாவிய விண்வெளி ஆய்வுப் போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் இந்தியா, அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட மொத்தம் 31 நாடுகள் பங்கேற்றன. உலகெங்கிலும் இருந்து லட்சக்கணக்கான மாணவர்கள் சமர்ப்பித்த ஆய்வுக் கட்டுரைகளில், பூமியைத் தவிர மற்ற கோள்களில் மனித குடியேற்றங்களை அமைப்பது குறித்த ஈரோடு மாணவர்களின் செயல்திட்டம்மிகச்சிறந்ததாகத் தேர்வு செய்யப்பட்டது.

வெற்றி பெற்ற மாணவர்கள்:

A.ஹரித், அக்சய் கீர்த்திக் A, அக்சயா ), ஜோஷிகா S.S, ஹரிகிசான் K.B, சரத் S.M, பிரணவ்கிருத்திக்K.S,ஆலன் ஜார்ஜ் L மற்றும் ஜனகன்.

ஆய்வின் பெயர்: DEMETER-PRIME

இந்த மாணவர்கள் சமர்ப்பித்த 'DEMETER-PRIME' என்ற ஆய்வுத் திட்டம், நடுவர் குழுவின் பெரும் பாராட்டைப் பெற்று, உலக அளவில் முதலிடத்தைப் பெற்றுத் தந்துள்ளது. இது இந்தியாவிற்கும், ஈரோடு மாவட்டத்திற்கும் கிடைத்த மிகப்பெரிய பெருமையாகும்.

இதனையொட்டி பள்ளியில் நடைபெற்ற பாராட்டு விழாவில், துணைப் பொது மேலாளர் வெங்கட கிருஷ்ணா ரெட்டி மற்றும் பள்ளி முதல்வர் பிரவீனா ஆகியோர் மாணவர்களுக்குப் பதக்கங்களையும், சான்றிதழ்களையும் வழங்கிப் பாராட்டினர்.

அப்போது அவர்கள் பேசுகையில், "இந்த உலகளாவிய வெற்றி மாணவர்களின் கடின உழைப்பிற்கும், அறிவியல் ஆர்வத்திற்கும் கிடைத்த அங்கீகாரம். இது இவர்களின் எதிர்கால விண்வெளி ஆராய்ச்சிப் பயணத்திற்கு ஒரு மிகப்பெரிய படிக்கட்டாக அமையும்" என நெகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். இச்சாதனைக்கு உறுதுணையாக இருந்த ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் பள்ளி நிர்வாகம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டது.

# "திமுக ஆட்சிக்கு எதிரான கொந்தளிப்பின் விளைவே 85.12% வாக்குகள் பதிவு" அன்புமணி பேச்சு



சென்னை:"திமுகஆட்சிக்கு எதிராக மக்கள் பெரும் கொந்தளிப்பில் இருந்தனர். திமுக ஆட்சியை அகற்றுவதற்காக திரண்டு வந்து வாக்களித்துள்ளனர். தேர்தலில் தங்களின் கோபத்தை தீர்ப்பாக வெளிப்படுத்திவிட்டனர். அதன் விளைவுதான் வரலாறு காணாத வகையில் 85.12% வாக்குகள் பதிவாகியிருக்கிறது" என்று பாமக தலைவர் அன்புமணி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தலில் 85.12% வாக்குகள் பதிவாகியிருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்திருக்கிறது. தமிழ்நாட்டில் தேர்தல் வரலாற்றில் இந்த அளவு வாக்குகள் பதிவாகியிருப்பது இதுதான்முதல்முறையாகும்.

தமிழ்நாட்டில் திமுக ஆட்சிக்கு எதிராக மக்கள் பெரும் கொந்தளிப்பில் இருந்தனர்; திமுக ஆட்சியை அகற்றுவதற்காகதிரண்டுவந்துவாக்களித்துள்ளனர் என்பதையுமே இது காட்டுகிறது.

தமிழ்நாட்டு மக்கள் எப்போதுமே ஜனநாயகத்தை மதிப்பவர்கள்; அமைதிப்புரட்சி செய்பவர்கள். இப்போதும் அதைத்தான் நிகழ்த்திக் காட்டியிருக்கிறார்கள். திமுக ஆட்சிக்கு வந்த நாள் முதலாகவே மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் அரசால் கட்டவிழ்த்து விடப்பட்டன.

இன்னொருபுறம் சட்டம் - ஒழுங்கை பாதுகாத்தல், கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்களை கட்டுப்படுத்துதல்,பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்தல்,வேலைவாய்ப்பு வழங்குதல் உள்ளிட்ட ஓர் அரசின் அடிப்படைக் கடமைகள் எதையுமே திமுக அரசு செய்யவில்லை.

அதனால்,கொந்தளித்துப் போன மக்கள் திமுகவுக்கு பாடம் புகட்டுவதற்காக காத்திருந்தனர். மக்கள் தங்களின் உணர்வுகளை அப்பட்டமாக வெளிப்படுத்தாமல், தெளிந்த நீரோடையாக இருந்தாலும், ஆழ்கடலின் பிரளயம் போன்று அவர்களின் மனதுக்குள் திமுகவை இந்தத் தேர்தலில் வீழ்த்த வேண்டும் என்ற கோபம் நீரு பூத்த நெருப்பாக கனன்று கொண்டே இருந்தது.

தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மக்களைச் சந்தித்த என்னைப் போன்றவர்களால் இந்த கோபத்தை புரிந்து கொள்ள முடிந்தது. ஆனால், ஆட்சியாளர்களால் இதைப் புரிந்துகொள்ள முடியவில்லை; அதனால் தங்களைத்திருத்திக்கொள்ளவும் இல்லை. எனவேதான் தமிழ்நாட்டு மக்கள் ஏற்கெனவே திட்டமிட்டிருந்த வாறு நேற்று நடந்த தேர்தலில் தங்களின் கோபத்தை தீர்ப்பாக வெளிப்படுத்திவிட்டனர். அதன் விளைவு தான் வரலாறு காணாத வகையில் 85.12% வாக்குகள் பதிவாகியிருப்பதாகும்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026, வாக்குப்பதிவு நாளான (23.04.2026) அன்று ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி மாவட்ட ஆட்சியர் அலுவலக முதல் தளத்தில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்குச்சாவடி மையங்களின் செயல்பாடுகளை பொருத்தப்பட்டுள்ளகண்காணிப்புக்கேமிராக்கள்கொண்டு கண்காணிக்கப்பட்டு வரும் மாவட்ட தேர்தல் கட்டுப்பாட்டு அறையின் செயல்பாடுகளை ஆய்வு மேற்கொண்டார்.

# JEE முதன்மை தேர்வில் ஈரோடு ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளி மாபெரும் சாதனை




தேசிய தேர்வு நிறுவனம் (NTA) JEE முதன்மை தேர்வு முடிவுகளை 2026 ஏப்ரல் 20 அன்று வெளியிட்டுள்ளது. இத்தேர்வில் தமிழ்நாடு ஸ்ரீ சைதன்யா ஈரோடு மாணவர் சித்தார்தன்.R 99.56 சதவீதம் பெற்று அகில இந்திய அளவில் 1623வது இடத்தை பிடித்து சாதனை படைத்துள்ளார். மேலும் மேகவர்தினி K.J 96.09 சதவீதமும், ஹரீஸ்வரன்.E 96 சதவீதமும், நிஸ்வந்த் தருன்.P 94.02சதவீதமும், கனிஷ்க்.T 93.92 சதவீதமும், தருண் நாராயணாஸ்ரீ.T 93.78 சதவீதமும், அபிலாஷ்.S 92.46 சதவீதமும், கௌரவ்.K 92.13 சதவீதமும், தர்ஷன்.S 91.34 சதவீதமும், சர்வேஷ்.K 91.19சதவீதமும் பெற்று பள்ளி அளவில் சாதனை படைத்துள்ளனர்.

ஸ்ரீ சைதன்யா கல்வி நிறுவனங்களின் இயக்குனர் சுஷ்மா போப்பானா மற்றும் நாகேந்திர ராவ் , தமிழ் நாடு செயலாக்க தலைவர் ஜெ. ஹரிபாபு , பள்ளியின் துணை பொது மேலாளர் வேங்கட கிருஷ்ணா ரெட்டி,மேல்நிலை பள்ளியின் முதல்வர் ராவுரி சஞ்சீவ ரெட்டி, உயர்நிலை பள்ளியின் முதல்வர் T.பிரவீணா மற்றும் ஆசிரிய ஆசிரியைகளும் பெற்றோர் மற்றும் பள்ளி நிர்வாகத்தினர் அனைவரும் JEE MAINS தேர்வில் வெற்றி பெற்ற அனைத்து மாணவ மாணவிகளையும் தங்களது வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும்தெரிவித்தனர்.

## சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகிலுள்ள

# நகர சூரைக்குடி கோயிலில் கும்பாபிஷேக மலர் வெளியீடு மலர்குழு உறுப்பினர்கள் உற்சாக பங்கேற்பு



காரைக்குடி- சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகிலுள்ள நகர சூரை க்குடி அருள்மிகு ஆவுடைய நாயகி அம்பாள் சமேத ஸ்ரீ தேசிகநாதர் சுவாமி திருக்கோயிலில் சமீபத்தில் நடைபெற்ற கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கும்பாபிஷேக மலர் சிறப்பாக வெளியிடப்பட்டது.

மலரை மலர் குழு பொறுப்பாளர் அரண்மனை சிறுவயல் சிங்காரம், கும்பாபிஷேக கமிட்டி தலைவர் பள்ளத்தூர் நாச்சியப்பன் அவர்களிடம் வழங்கினார். பின்னர், பள்ளத்தூர் நாச்சியப்பன் அவர்கள் மலரை வெளியிட்டு விழாவை தொடங்கி வைத்து,,விழாவில் பங்கேற்ற அனைவருக்கும் கும்பாபிஷேக மலரை வழங்கினார். இந்நிகழ்வில் நகர சூரைக்குடி கோயில் கும்பாபிஷேக கமிட்டி உறுப்பினர்கள் மற்றும் மலர்க் குழு உறுப்பினர்கள் பெருவாரியாக கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். இந்த கும்பாபிஷேக மலர் வெளியீடு, பக்தர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றதுடன், கோயிலின் ஆன்மீகச் சிறப்பை எடுத்துரைக்கும் வகையில் அமைந்தது.

# தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகளின் எண்ணிக்கையை சரிபார்க்கும் பணிகள் தொடங்கியது



தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகளின் எண்ணிக்கையை சரிபார்க்கும் பணிகள் தொடங்கியது. ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் வேட்பாளர்களின் முகவர்களுக்கு வழங்கப்பட்ட படிவம் 17C-யில் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கையுடன், மொத்தம் பதிவான வாக்குகளின் எண்ணிக்கை விபரங்கள் ஒப்பீடு செய்து சரிபார்க்கப்படுகிறது. தேர்தல் நடத்தும் அலுவலர்கள், தேர்தல் பார்வையாளர்கள் இணைந்து இப்பணியை மேற்கொண்டு வருகின்றனர். சரிபார்ப்பு பணி நிறைவடைந்த பிறகு தொகுதி வாரியாக பதிவான வாக்குகள் தொடர்பான புள்ளி விவரம் வெளியாகும் என தகவல் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாட்டின் 234 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் வாக்குப்பதிவு நிறைவு பெற்றது. தேர்தல் ஆணையத்தின் உத்தேச வாக்குப்பதிவு தரவுகளின்படி சுமார் 85% வாக்குகள் பதிவாகியுள்ளன. சுதந்திரத்திற்குப் பிறகு தமிழ்நாட்டில் நடைபெற்ற தேர்தல்களில் பதிவான வாக்குச் சதவிகிதத்திலே இதுவே அதிகம் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. தமிழ்நாட்டில் முதல் முறையாக 85 சதவிகிதத்துக்கும் மேல் வாக்குகள் பதிவாகியுள்ளன. இதற்கு முன்னர் அதிகபட்சமாக 2011-ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் 78 சதவிகிதத்துக்கும்அதிகமான வாக்குகள் பதிவாகியிருந்தன.

2021 தேர்தலை விட 2026 தேர்தலில் சென்னையில் 9 தொகுதிகளில் வாக்களித்தோர் எண்ணிக்கை குறைந்த தகவல் அம்பலமாகியுள்ளது. வாக்கு சதவீதம் அதிகரித்ததாக தெரிந்தாலும் 44 ஆயிரம் பேர் வரை குறைவாக வாக்களித்தது புள்ளி விபரங்கள் மூலம் தெரியவந்துள்ளது சென்னை மாவட்டத்துக்குட்பட்ட 16 சட்டசபை தொகுதிகளில் 419 வேட்பாளர்கள் களத்தில் இருந்தனர். இவர்களில் 298 பேர் சுயேச்சைகள். சென்னை மாவட்டத்துக்கு உட்பட்ட 16 சட்டமன்ற தொகுதிகளிலும் மொத்தம் 83.73 சதவீதம் வாக்குகள் பதிவாகி உள்ளன. ஆனாலும், சதவீதம் அதிகரித்து காணப்பட்டாலும், கடந்த தேர்தலை விட இந்த தேர்தலில் வாக்குப் பதிவு வெகுவாக குறைந்துள்ள தகவல் அம்பலமாகியுள்ளது. சதவீத அடிப்படையில் அதிகமாக வாக்களித்தது போன்ற ஒரு பிம்பம் தெரிந்தாலும், வாக்காளர்கள் எண்ணிக்கை என்பது வெகுவாக குறைந்துள்ளது தெரியவந்துள்ளது.

இந்நிலையில் தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகளின் எண்ணிக்கையை சரிபார்க்கும் பணிகள் தொடங்கியது. தேர்தல் நடத்தும் அலுவலர்கள், தேர்தல் பார்வையாளர்கள் இணைந்து இப்பணியை மேற்கொண்டு வருகின்றனர். சரிபார்ப்பு பணி நிறைவடைந்த பிறகு தொகுதி வாரியாக பதிவான வாக்குகள் தொடர்பான புள்ளி விவரம் வெளியாகும் என தகவல் தெரிவித்துள்ளனர்



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026, வாக்குப்பதிவு நாளான (23.04.2026) அன்று ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி 98 ஈரோடு கிழக்கு சட்டமன்றத்தொகுதி சம்பத்நகர், ஸ்ரீ அம்மன் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளியில் உள்ள வாக்குச்சாவடியில் தனது வாக்கினை செலுத்தி ஜனநாயகக்கடமையினை ஆற்றினார்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026, வாக்குப்பதிவு நாளான (23.04.2026) அன்று ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி துணைவியார் சகிலா 98 ஈரோடு கிழக்கு சட்டமன்றத்தொகுதி சம்பத்நகர், ஸ்ரீ அம்மன் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளியில் உள்ள வாக்குச்சாவடியில் தனது வாக்கினை செலுத்தி ஜனநாயகக்கடமையினை ஆற்றினார்.



ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி தொகுதி பாஜக வேட்பாளர் கிருத்திகா மற்றும் அவரது மாமியாரும் தற்போதைய மொடக்குறிச்சி தொகுதி எம்எல்ஏவுமான டாக்டர் சி. சரஸ்வதி ஆகியோர் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி சி.எஸ்.ஐ பள்ளியில் தங்களது வாக்கினை செலுத்தினார்கள்.

# திமுக கிளை கழக அவை தலைவர் முதலாம் ஆண்டு நினைவு நாள்

## முதியோர் இல்லத்தில் அன்னதானம்



செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றியம் கிளைக் கழக அவை தலைவர் நீர் பாசன சங்கத்தலைவர் கிராம பண்ணையார் மற்றும் நிலக்கிழார் மறைந்த க.காளி அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி ஒட்டி பெரும்பேர்கண்டிகையில் உள்ள முதியோர் இல்லத்தில் அன்னதானம் வழங்கப்பட்டது. தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல்லாசியுடன் காஞ்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் கா.சுந்தர், காஞ்சி பாராளுமன்ற உறுப்பினர் க.செல்வம்,அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றிய கழக செயலாளர் டி.வி கோகுலகண்ணன், ஆகியோரின் வழிகாட்டுதலின்படி பெரும்பேர்கண்டிகை பேர்ட்ஸ் முதியோர் இல்லத்தில் பொற்பனங்கரணை கா.காளி அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை

முன்னிட்டு திமுக காஞ்சி தெற்கு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றியம் திமுக காஞ்சி தெற்கு மாவட்ட முக்கிய நிர்வாகி வழக்கறிஞர் கா.சம்பத் ரதிதேவி

அவர்களின் தாயார் கா.சுலோச்சனா காளி தலைமையில் முதியோர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் கா ரதிதேவி ஜெயராமன்

பொற்பனங்கரணை ஊராட்சி மன்ற தலைவர் ச.கவிதா சம்பத்

மல்லிகா சின்னபையன் முனியாண்டி எல்லம்மாள் செல்வராஜ் அபரஞ்சி ராஜா அமரேசன் விஜயபாபு செல்வராஜ் குப்பன் பழனி மணி கிராம பண்ணையார்கள் சுப்பிரமணி நாகப்பன் கோவிந்தராஜ் வெளியம்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் தா.முத்துக்குமார் ராஜவேல் அன்பரசு முருகவேல் மற்றும் கிராம பொதுமக்கள் திமுக முக்கிய நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் மதிமுக வேட்பாளர் செந்தில்நாதன் தனது மனைவியுடன் வந்து ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியில் உள்ள வாக்கு சாவடியில் வாக்கு செலுத்தினார்.

# வாக்குப்பதிவு இயந்திரம் உடைப்பு ஒருவர் கைது



திருவண்ணாமலை: வாக்குப்பதிவு இயந்திரத்தை உடைத்த சுயேட்சை வேட்பாளரின் பூத் ஏஜெண்ட் வெங்கடேசனை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதி, திருவண்ணாமலை மாவட்டத்தின் முக்கிய தொகுதியாகும். இந்த தொகுதிக்குட்பட்ட கீழ்பாலூர் கிராமத்தில் வாக்காளர்கள் அதிகம் உள்ளனர். இந்த நிலையில் வாக்குச்சாவடி எண் 142-ல் நேற்று காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு, நண்பகல் 12 மணி வரை சுமார் 45% வாக்குகள் பதிவாகியிருந்தன. வாக்காளர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்த போது, சுயேட்சை வேட்பாளர் ஒருவரின் பூத் ஏஜெண்ட் வெங்கடேசன் வாக்குச்சாவடி உள்ளே நுழைந்தார்.

அப்போது பூத் ஏஜெண்ட் வெங்கடேசன், "வாக்குப்பதிவு இயந்திரத்தில் தவறுகள் உள்ளன, அது சரியாக இல்லை" என்று கூச்சலிட்டு, திடீரென இயந்திரத்தின் திரை மற்றும் பாகங்களைக் குத்தி உடைத்தார். இதனால் இயந்திரம் முற்றிலும் சேதமடைந்து, திரும்பப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. இந்த சம்பவத்தை பார்த்த வாக்காளர்கள் அதிர்ச்சியடைந்து காவல்துறையினருக்கு தகவல் கொடுத்துள்ளனர்.

உடனடியாக திருவண்ணாமலை காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து, வெங்கடேசனை கைது செய்தனர். தேர்தல் அதிகாரிகள், மாற்று வாக்குப்பதிவு புதிய இயந்திரத்தைக் கொண்டு வந்து, வாக்குப்பதிவை மீண்டும் தொடங்கினர். சுமார் 30 நிமிட இடைவெளியில் வாக்குப்பதிவு மீண்டும் தொடங்கியது.

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் இதுவரை இல்லாத அளவாக அதிகளவில் வாக்குகள் பதிவாகியுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் சுமார் 85.15% வாக்குகள் பதிவாகியுள்ளது. இதில் திருவண்ணாமலை மாவட்டத்தில் மொத்தம் 89.66% வாக்குகள் பதிவாகியுள்ளது. இதில் ஆரணி சட்டமன்றத் தொகுதியில் 89.31% வாக்குகளும், செங்கம் சட்டமன்றத் தொகுதியில் 89.46%, செய்யாறு சட்டமன்றத் தொகுதியில் 91.97% வாக்குகளும், கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் 91.03% வாக்குகளும், கீழ்பென்னாத்தூர் சட்டமன்றத் தொகுதியில் 90.30% வாக்குகளும், போளூர் சட்டமன்றத் தொகுதியில் 89.37%, திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியில் 87.32%, வந்தவாசி சட்டமன்றத் தொகுதியில் 88.62% வாக்குகள் பதிவாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் பதிவான வாக்குகள் வரும் மே 4-ம் தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளது. இதனிடையே, வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள இடங்களில் சிசிடிவி கண்காணிப்புக் கேமராக்கள் மூலமும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. அத்துடன் மூன்றடுக்கு பாதுகாப்பும் போடப்பட்டுள்ளது.

# சித்திரை திருவிழாவை முன்னிட்டு வைகை அணையில் நீர் திறப்பு



தேனி: சித்திரை திருவிழாவை முன்னிட்டு வைகை அணையில் இருந்து வினாடிக்கு 500 கனஅடி தண்ணீர் திறக்கபட்டுள்ளது.

உலகப் புகழ்பெற்ற மதுரை சித்திரை திருவிழாவின் போது, கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் நிகழ்விற்காக ஒவ்வொரு ஆண்டும் வைகை அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம்.

ஆனால், இந்த ஆண்டு 71 அடி உயரம் கொண்ட அணையின் நீர்மட்டம் தற்போது 33 அடியாக சரிந்துள்ளது. நீர் இருப்பு இல்லாத காரணத்தால், மதுரை சித்திரை திருவிழாவிற்கு தண்ணீர் திறக்க முடியுமா? என்ற அச்சம் நிலவி வந்தது.

இதுபோன்ற சூழலில் மே 1 ஆம் தேதி கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் நிகழ்வு நடைபெற உள்ளதால், இருப்பில் உள்ள தண்ணீரைக் கொண்டு மதுரை சித்திரை திருவிழாவிற்கு தண்ணீர் திறக்க முடியுமா என்று பொதுப்பணித் துறையினர் தீவிர ஆலோசனைகள் மேற்கொண்டு வந்தனர்.

குறிப்பாக, அணையிலிருந்து ஆற்றுப்படுகை வழியாக தண்ணீர் திறக்கப்பட்டால் கடும் வெயில், வறண்டு போன நிலம் இதன் காரணமாக தண்ணீர் செல்வதில் சிக்கல் ஏற்படும் என்பதை உணர்ந்த பொதுப்பணி துறையினர் மாற்று ஏற்பாடுகளை ஆராய்ந்தனர். எனவே, வைகை அணையில் இருந்து பாசன கால்வாய் வழியாக மதுரைக்கு தண்ணீர் கொண்டு செல்ல முடிவு செய்யப்பட்டது. மொத்தமாக 170 மில்லியன் கன அடி தண்ணீர் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, இன்று முதல் வருகிற 29ஆம் தேதி வரையில் தண்ணீர் திறக்க முடிவு செய்து, வினாடிக்கு 500 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. வைகை அணையில் இருந்து பாசன கால்வாய் வழியாக மதுரை கொண்டு செல்லப்படும் தண்ணீர் முதற்கட்டமாக மதுரை செல்லூர் கண்மாயில் தண்ணீரை தேக்கி வைத்து அங்கிருந்து கள்ளழகர் ஆற்றில் இறங்கும் பகுதிக்கு கொண்டு செல்ல முடிவு செய்யப்பட்டுள்ளது.

மதுரை கொண்டமாரி ஓடை வழியாகவும், மதுரை கள்ளழகர் ஆற்றில் இறங்கும் பகுதிக்கு தண்ணீர் கொண்டு செல்லவும் திட்டமிட ப்பட்டு ள்ளனர். மதுரை சித்திரை திருவிழாவை போலவே சோழவந்தான் பகுதியிலும் கள்ளழகர் ஆற்றில் இறங்கும் நிகழ்வு பிரம்மாண்டமாக நடைபெறும். அந்த நிகழ்விற்கும் தண்ணீர் வழங்கும் வகையில் ராமராஜபுரம் பகுதியில் இருந்து சோழவந்தான் பகுதிக்கு தண்ணீர் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஏற்கனவே, நீர்மட்டம் சரிந்துள்ள நிலையில் வைகை அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால் அணையின் நீர்மட்டம் 4 முதல் 5 அடி வரை சரியும் என எதிர்பார்க்கப்படுகிறது.



ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதியில் உள்ள நஞ்சப்பன்கவுண்டன்வலசு அரசு மேல்நிலைப்பள்ளியில் உள்ள வாக்குச்சாவடியில் மனிதநேய மக்கள் கட்சி தலைவர் அ.சித்தீக் ஜனநாயககடமையை நிறைவேற்றினார்



ஈரோடு மாநகராட்சி 37 வது வார்டு காமராஜர் மேல்நிலைப் பள்ளியில் உள்ள வாக்குச்சாவடியில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் ஜெ.பைஜுல் அகமது தனது வாக்கினை செலுத்தி ஜனநாயக கடமையை நிறைவேற்றினார்.



கன்னியாகுமரி கடற்கரையில் சுற்றுலா வழிகாட்டியை தாக்கிய சுற்றுலா வந்த பயணிகள்கொலை வெறி தாக்குதல் நடத்தியசம்பவம்பெரும்பரபரப்புஏற்படுத்தி உள்ளதுகடலில்வெளியூர்சுற்றுலாபயன்கள் குளித்து கொண்டிருந்த நிலையில் ஆபத்து ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக, கன்னியாகுமரி பகுதியை சேர்ந்த சுற்றுலா வழிகாட்டி அவர்களை வெளியேற வலியுறுத்தியுள்ளார், அவர்கள் கேட்காததால் மீண்டும் கோபமாக அழைத்ததாக கூறப்படுகிறது,இதில் ஆத்திரமடைந்த அந்த சுற்றுலா பயணிகள் சுற்றுலா வழிகாட்டியை கண்மூடித்தனமான தாக்கிய உள்ளனர்இது குறித்துகன்னியாகுமரிபோலீசார்விசாரணை மேலும் தாக்கப்பட்டவருக்கு ஆதரவாக கன்னியாகுமரியில்திரண்டஉள்ளூர்நபர்கள் தாக்கப்பட்டவர்ரத்தகாயத்துடன்இருப்பதாக கூறப்படுகிறது

# "ஏளனம் பேசியோருக்கு செயல் மூலம் தவெகவினர் பதிலடி" விஜய் பெருமிதம்



சென்னை: "அரசியல் மாயாஜாலக் கணக்குகள் சாதாரண வெகுஜன மக்களால் உடைத்து நொறுக்கப்பட்டுள்ளன. தேர்தல் திருவிழா என்றும், ஜனநாயகத் திருவிழா என்றும் சொல்லப்படுவதன் அர்த்தம் சுகப்பட்டதே தேர்தல் தான்" என தவெக தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

மேலும், 'இவர்களுக்கெல்லாம் என்ன அரசியல் தெரியும், எப்படித் தாக்குப் பிடிப்பார்கள்' என்று ஏளனம் பேசியோருக்குச் செயல் மூலம் தவெகவினர் பதிலடி தந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், "அரசியல் என்பது ஏதோ அசகாய சூரர்களுக்கானது மட்டுமே. அதீத அனுபவசாலிகளுக்கானது மட்டுமே. பதவிகளை அனுபவிப்பவர்களுக்கானது மட்டுமே.இப்படி அரசியலை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் மட்டுப்படுத்தியும் கட்டுப்படுத்தியும் வைத்தவர்களின் மாயாஜாலக் கணக்குகள், சாதாரண வெகுஜன மக்களால் உடைத்து நொறுக்கப்பட்டுள்ளன.

அரசியலைக் கண்டுகொள்ளவே மாட்டார்கள் என்று இதுவரை அனுமானிக்கப்பட்ட இளைஞர்களும் பெண்களும் அரசியல் பேசத் தொடங்கிய அதிசயமும் அவசியமும் நிகழத் தொடங்கிவிட்டது. இது எப்போது இருந்து தொடங்கியதென நடுநிலை மனம்கொண்டோர் அனைவரும் உணர்வர். இதுவரை பெருமளவிலான குறிப்பிட்ட சதவீத வாக்குகள், வாக்குச்சாவடி பக்கமே வராமல் இருந்தன. ஆனால், 2026–ஆம் ஆண்டு ஏப்ரல் 23–ம் தேதி நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப்பதிவு, தமிழகத் தேர்தல்அரசியல்வரலாற்றில் சிகரமான வரலாற்று நிகழ்வாகப் பதிவாகி உள்ளது. 85% வாக்குப்பதிவு என்பதெல்லாம் இதுவரை தமிழ்நாடு காணாத ஒன்று.

வாக்குச்சாவடிகள் எங்கும் கோவில்களில் காணப்படும் கூட்டம் போல, குடும்பம் குடும்பமாகக் குழந்தை குட்டிகளுடன் வந்து வாக்களித்ததைக் கண்டு வியக்காதோர் எவரும் இருக்கவே வாய்ப்பில்லை. அது மட்டுமா? வெளிமாநிலங்களில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் வாக்களிப்பதற்காகவே பெரும்பொருள் செலவு செய்து வந்த ஜனநாயகர்களை இருகரம் கூப்பி வணங்காமல் இருக்க முடியுமா? தேர்தல் திருவிழா என்றும்,ஜனநாயகத் திருவிழா என்றும் சொல்லப்படுவதன் அர்த்தம் சுகப்பட்டதே நேற்றுதான். இந்த 2026 ஏப்ரல் 23 தான்.எனினும் இது ஒரு தொடக்கம் மட்டுமே.

தமிழகத் தேர்தல் அரசியலை அர்த்தப்படுத்திய தமிழ்நாட்டு மக்களாகிய, என் பாட்டி, அம்மா, அக்கா, தங்கைகள், என் தாத்தா, அப்பா, அண்ணன், தம்பிகள், என் குடும்ப உறவுகள் அனைவருக்கும் என் சிரம் தாழ்ந்த நன்றியறிதலைக்காணிக்கையாக்குகிறேன்.

குறிப்பாக, நம் குடும்பத்தினரை வழிநடத்திய என் குட்டி நண்பா நண்பீஸுக்கு என்னுடைய - உங்கள் விஜய் மாமாவின் ஸ்பெஷல் வணக்கமும் நன்றியும். குறிப்பாக, நான் நன்றி செலுத்த வேண்டியது, நம் வாக்குச்சாவடி முகவர்களுக்கும், நம் கட்சித் தோழர்களுக்கும் அனைத்து நிலை நிர்வாகிகளுக்கும்தான்.

இவர்களுக்கெல்லாம் என்ன அரசியல் தெரியும்? எப்படித் தாக்குப் பிடிப்பார்கள் என்று ஏளனம் பேசியோருக்குச்செயல்மூலம்பதிலடி தந்த கட்சித் தோழர்களே...உங்களுக்கு என் மனம்நிறைந்த வாழ்த்துகளும் நன்றியும். கட்சித்தோழர்களுக்கு உறுதுணையாக இருந்த குடும்பத்தினருக்கும் நன்றி" என்று விஜய் தெரிவித்துள்ளார்.

# "வருமான வரித் துறை சோதனை... இது தேர்தல் நேர வன்கொடுமை!" தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை கண்டனம்



சென்னை: "எத்தனை எதிர்க்கட்சி தலைவர்கள் வீட்டில் சோதனை நடத்தியுள்ளனர் என்பதற்கான வெள்ளை அறிக்கையை வருமான வரித்துறையினர் வெளியிட வேண்டும்" என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை வலியுறுத்தியுள்ளார்.

செய்தியாளர்களிடம் அவர் கூறும்போது, "ஜனநாயகக் கடமையை ஆற்றிய தமிழ்நாட்டு வாக்காளர்களுக்கு நன்றி. மத்தியில் பாஜக அரசு கொண்டு வர முயன்றது பெண்களுக்கான இடஒதுக்கீடு மசோதா அல்ல. அது ஓர் ஏமாற்றும் மசோதா. உண்மையான மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை பஞ்சாயத்து ராஜ் மூலம் கொண்டு வந்தவர் மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்த்.

கடந்த வாரம் ராகுல் காந்தி பிரச்சாரத்துக்கு வந்தபோது, வெளிமாநில அதிகாரிகள் சிலர் எங்கள் இடங்களில் முற்றுகையிட்டனர். குறிப்பாக,எனது தேர்தல் பொறுப்பாளர் மனோகரன் என்பவரது இடத்தில் அதிகாரிகள் சோதனை நடத்தியுள்ளனர். நான் தேர்தல் பரப்புரைக்கு வெளியில் சென்ற நேரத்தில் அலுவலகம் சென்ற அதிகாரிகள் எங்கள் அலுவலக சிசிடிவி-யை சுவிட்ச் ஆ:ப் செய்துள்ளனர். எதற்காக சிசிடிவி-யை ஆ:ப் செய்ய சொன்னீர்கள்? ஒரு ஜனநாயக நாட்டில் வெளிப்படைத் தன்மையுடன் அதிகாரிகள் சோதனை நடத்த வேண்டும்.

மேலும்,சோதனையில் பணம் கிடைக்கவில்லை என்றதும், பின்னர் சிசிடிவியை ஆன் செய்து பதிவுகளைக் கேட்டு ஆய்வு செய்துவிட்டு, அதிலும் ஒன்றும் கிடைக்கவில்லை என்றதும் சோதனைக்கு வந்த அதிகாரிகள் வெளியேறியுள்ளனர்.

அப்போது நடந்தவை காட்சிகளாகசிசிடிவியில் பதிவாகியுள்ளது.

ஆனால், எனக்கு சம்பந்தப்பட்ட இடங்களில் எங்கும் சோதனை நடத்தவில்லை என்று வருமான வரித் துறை அதிகாரிகள் கூறியுள்ளனர். நான் பிரச்சாரத்தில் இருந்த சமயம் எனது ஸ்ரீ பெரும்புதூரில் தொகுதியில் ஏப்ரல் 19,20 தேதிகளில் நடைபெற்ற சோதனையில் எனது அலுவலகத்தில் இருந்த என்ன பொருட்களை எடுத்து சென்றார்கள் என்பது எனக்கு தெரியவில்லை.

மேலும், எனது ஆதரவாளர்கள் இடங்களிலும் பல கட்ட சோதனை நடைபெற்றது. இருப்பினும் சோதனையில் எந்த பொருட்களும் கிடைக்கவில்லை. தேர்தல் நேரத்தில் இது போல் ஒரு நடவடிக்கை என்பது வன்கொடுமை. இது குறித்து கேள்வி எழுப்பினால்,எங்கள் மீதே வருமான வரித் துறையினர் புகார் கொடுத்துள்ளனர்" என்றார்.

வருமான வரித் துறையினர் சோதனை நடத்தியதாக கூறி சிசிடிவி வீடியோ ஒன்றை வெளிட்டு தொடர்ந்து பேசிய செல்வப்பெருந்தகை, "இந்த ஆதாரத்தை நேற்றைய தினமே வெளியிட்டால், தேர்தல் ஸ்டன்ட் அடிப்பதாக விமர்சனம் செய்வார்கள். அதனால், வாக்குப் பதிவு நிறைவு பெற்ற பின்னர் இன்று சிசிடிவி பதிவு வெளியிடுகிறோம்.

அதிகாரிகள் மீது நாங்கள் குற்றச்சாட்டு வைக்க விரும்பவில்லை. ஏனென்றால், அவர்கள் ஆட்சியாளர்கள் மூலம் ஏவி விடப்படுகிறார்கள். உன்மையாக இருந்தால் பத்திரிகையில் வெளிப்படையாக கூறி இருக்கலாம். ஏன் கூறவில்லை?

நான் வெளிப்படையாக வேண்டுகோள் விடுக்கிறேன். வருமான வரித் துறையினர் எத்தனை மதச்சார்பற்ற கூட்டணி வேட்பாளர்கள் வீடுகளில் சோதனை நடைபெற்றது, எத்தனை அதிமுக தலைமையிலான கூட்டணி கட்சி வேட்பாளர்கள் வீட்டுகளில் சோதனை நடைபெற்றது என்பது குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்.

அதன் மூலமாகவே, தமிழக வேட்பாளர்கள் மீது டெல்லி தலைமை காழ்ப்புணர்ச்சியுடன் செயல்படுகிறது என்பது நாட்டு மக்களுக்கு தெரியவரும்.

மல்லிகர்ஜுனா கார்கே, வருமான வரித் துறையை சோதனையை கண்டித்து "ஜனநாயக நாட்டில் அதிகாரிகளை வைத்து மிரட்டுவதும் ஒருவித தீவிரவாதம் தான்" என்று கூறியதற்கு தேர்தல் ஆணையம் விளக்கம் கேட்டுள்ளது.

சோதனை என்ற பெயரில் மக்களை அதிகாரிகள் அச்சுறுத்துவது என்பது மிகவும் மோசமானது. மத்தியில் ஆட்சி மாற்றம் ஏற்படும் என்று கூறுகின்றனர், கண்டிப்பாக 5 மாநிலத் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு சந்திரபாபு நாயு, நிதிஷ் குமார் ஆகியோர் தயாராக இருக்கின்றனர்.ஒரு நிமிடத்தில் மத்தியில் ஆட்சி அமைக்கப்படும்" என்று செல்வப்பெருந்தகை கூறினார்.

# தமிழக உள் மாவட்டங்களில் ஏப்.27 வரை 5 டிகிரி வெப்பம் அதிகரிக்க வாய்ப்பு



சென்னை:தமிழக உள் மாவட்டங்களில் நாளை முதல் 27–ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி :.பாரன்ஹீட் வரை உயரக்கூடும். இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தென் தமிழக கடலோர பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. மேலும், கிழக்கு விதர்பா முதல் குமரிக்கடல் வரை தெலங்கானா, உள் கர்நாடகா மற்றும் தமிழகம் வழியாக ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை சுமார் 900 மீட்டர் உயரத்தில், நிலவுகிறது.


இத்காரணமாக(ஏப்.25) முதல் ஏப்.27–ம் தேதி வரை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் தென் தமிழக கடலோர மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும், 28–ம் தேதி ஒரிரு இடங்களில் இடி,மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழையும் பெய்ய வாய்ப்புள்ளது. 29, 30 தேதிகளில் தமிழகம், புதுச்சேரியில் ஒரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

உள் தமிழக மாவட்டங்களில் நாளை முதல் 27–ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி :.பாரன்ஹீட் வரை உயரக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 100 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 82 டிகிரி :.பாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக ராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சிமடத்தில் 2 செமீ, கன்னியாகுமரி மாவட்டம் திற்பரப்பு பெருஞ்சாணி அணை, புத்தன் அணை, திருநெல்வேலி மாவட்டம் ஊத்து, நாலுமுக்கு ஆகிய இடங்களில் தலா 1 செமீ மழை பதிவாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மோசமான வானிலை காரணமாக சபரிமலைக்கு மேல் ஹெலிகாப்டர் பறக்க நேர்ந்தது: இந்திய கடற்படை விளக்கம்





திருவனந்தபுரம்: சபரிமலை கோயில் மேலே ஹெலிகாப்டர் தாழ்வாக பறந்த விவகாரத்தில் 'ஹெலிகாப்டர் திட்டமிடப்பட்ட பாதையில் செல்லவில்லை. மோசமான வானிலை காரணமாக சபரிமலைக்கு மேல் ஹெலிகாப்டர் பறக்க நேர்ந்தது. வானிலை சீரானதும் ஹெலிகாப்டர் கொச்சி தளத்திற்கு திரும்பியது என்று சபரிமலை கோயில் மேலே ஹெலிகாப்டர் தாழ்வாக பறந்த விவகாரத்தில் பாதுகாப்பு துறை விளக்கம் அளித்துள்ளது.

சபரிமலை ஐயப்பன் கோயில் மீது கடலோர காவல்படையின்ஹெலிகாப்டர் ஒன்று, நேற்று மிகவும் தாழ்வாக பறந்த விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. திருவனந்தபுரம்: கேரளாவில் புகழ்பெற்ற சபரிமலை கோவில் உள்ளது. இந்நிலையில் நேற்று மதியம் திடீரென்று கோவில் வளாகத்தின் மேல்புறம் உயரம் குறைவாக இந்திய கடற்படையின் ஹெலிகாப்டர் 4 முறை பறந்தது. இதனால் அங்கிருந்த போலீசார் உள்பட அனைவரும் அதிர்ச்சியடைந்தனர். இதுதொடர்பாக பம்பை போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ள நிலையில் இந்திய கடற்படை சார்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

கேரளாவில் புகழ்பெற்ற சபரிமலை கோவில் அமைந்துள்ளது. நேற்று மதியம் சுமார் 12 மணி முதல் 12.30மணிக்குள் ஹெலிகாப்டர் ஒன்று 4 முறை உயரம் குறைவாக பறந்து சென்றது. குறிப்பாக கோவில் வளாகத்தில் உள்ள கொடி மரத்தில் இருந்து 5 மீட்டர் உயரத்தில் தான் இந்த ஹெலிகாப்டர் பறந்தது. மீண்டும் மீண்டும் இந்த ஹெலிகாப்டர் பறந்ததால் அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு இருந்த போலீசார் உள்பட அனைவரும் அதிர்ச்சியடைந்தனர்.

அதோடு ஹெலிகாப்டரில் இருந்தவர்களில் ஒருவர் கோவில் வளாகத்தை போட்டோ மற்றும் வீடியோ எடுத்துள்ளார். இதனால் யாரோ கோவிலை உளவு பார்ப்பதாகஅவர்கள் நினைத்தனர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது. அங்கிருந்தவர்கள் கோவில் வளாகத்தின் மேல் பறந்த ஹெலிகாப்டரைவீடியோ மற்றும் போட்டோவாக எடுத்து கொண்டனர். இதுபற்றி பம்பை போலீசில் புகார் செய்யப்பட்டது. போலீசார் வழக்குப்பதிவு செய்து கொண்டர் முதற்கட்ட விசாரணையில் அந்த ஹெலிகாப்டர் இந்திய கடற்படையின் Chetak ரக ஹெலிகாப்டர் என்பது தெரியவந்தது. அதன் எண் CG –821 என்பதும் கண்டுபிடிக்கப்பட்டதோடு அதில் பறந்தவர்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. சபரிமலை கோவில் வளாகத்தின் மேல் ஹெலிகாப்டர் பறந்து செல்ல எந்த முன்அனுமதியும் பெறவில்லை,கோவில் வளாகத்தை அனுமதியின்றி போட்டோ, வீடியோ எடுத்ததால் இந்தவழக்கு பதிவு செய்யப்பட்டது. ஹெலிகாப்டர் ஏன் தாழ்வாக கோவில் வளாகத்தின் மேல் பறந்தது? என்பது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்திய கடற்படை சார்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அதில்,"இது ஒரு ரோந்து ஹெலிகாப்டராகும். கொச்சியில் இருந்து 60 முதல் 80 கிலோமீட்டர் தொலைவுக்கு வழக்கமாக பறந்து பயிற்சியில் ஈடுபடும். இந்த ஹெலிகாப்டர் 6 ஆயிரம் அடி உயரத்தில் பறந்தது. ஆனால்மதியம்வேளையில் அதிகப்படியான மேகமூட்டம் மற்றும் மோசமான வானிலை காரணமாக திட்டமிடப்பட்ட பாதையில் இருந்து ஹெலிகாப்டர் விலகியதோடு உயரம் குறைவாக பறந்தது.

பம்பை மலையில் மேல் பறந்தது. வானிலை சரியான பிறகு மீண்டும் அந்த ஹெலிகாப்டர் கொச்சி தளத்துக்கு வந்தது" என்று கூறப்பட்டுள்ளது. இதன்மூலம் மோசமான வானிலை காரணமாக தான் ஹெலிகாப்டர் சபரிமலை கோவில் சன்னிதானத்தின் மேல் உயரம் குறைவாக பறந்தது. இதன் பின்னணியில் வேறு எந்த நோக்கமும் இல்லை என்று இந்திய கடற்படை விளக்கம் அளித்துள்ளது.

# Raghav Chadha, 6 other Rajya Sabha AAP MPs merge with BJP



*The move comes days after the AAP removed Raghav Chadha as the deputy leader in the Rajya Sabha.*

*Aam Aadmi Party MP Raghav Chadha said on Friday that the two-third members belonging to the AAP in Rajya Sabha are merging themselves with the Bharatiya Janata Party (BJP), exercising the provisions of the Constitution of India.*

*The decision, a move to ensure retention of Rajya Sabha membership, comes days after the AAP removed him as the deputy leader in the Rajya Sabha over allegations of not raising key issues against the government and doing "soft PR" instead.*

*Raghav Chadha made the announcement in a press conference two more MPs he said are part of the merger – Ashok Mittal and Sandeep Pathak. Interestingly, Ashok Mittal is who the AAP picked as the replacement of Raghav Chadha for the Rajya Sabha deputy leader post. Track Raghav Chadha news updates here*

*The math behind the move There are 10 AAP MPs in the Rajya Sabha and, according to Raghav Chadha, more than two-third of them are part of the decision – a figure needed for the MPs to retain their membership in the upper house.*

*"They have signed and this morning we submitted the signed letter and documents to the Rajya Sabha chairman, Chadha said, adding that the other four AAP MPs who have agreed for the move are Harbhajan Singh, Rajinder Gupta, Vikram Sahney and Swati Maliwal."*

*"The AAP, which I nurtured with my blood and sweat, and gave 15 years of my youth to, has deviated from its principles, values and core morals. Now this party does not work in the interest of the nation but for its personal benefits... For the past few years, I could feel that I am the right man in the wrong party. So, today, we announce that I am distancing myself from the AAP and getting close to public," Chadha said, addressing the press conference with Sandeep Pathak and Ashok Mittal.*

*Detailing on the reason behind distancing himself from party activities, Raghav Chadha said he did so because he does not "want to be a part of AAP's crimes".*

*"I was not eligible for their friendship because I was not a part of their crime. We had just two options – either quit politics and give up our public work in the last 15-16 years or we do positive politics with our energy and experience," Chadha said in the press conference.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.